100

உ

வேலும்மயிலும் துணை.

இரண்டு பெண்டாட்டிக்காரன் கெண்டை ஏறிய திண்டாட்டச் சிந்து.

இவை

தஞ்சைவித்வான் மகா-ா-ஸ்ரீ சுப்ரமணியபிள்ளை அவர்கள்
சிஷ்யன் ஸ்ரீகாழி க்ஷேத்திர
T. L. இராமசாமிபிள்ளைஅவர்கள் இயற்றியது.

சீகாழி திரிபுரசுந்தரி பிரஸில் அச்சிடுவிக்கப்பட்டது.
1930.
காப்பிகள் 1000.] காப்பிரைட் [விலை பை 6.

உ

வேலும்மயிலும்துணை.

இரண்டு பெண்டாட்டிக்காரன்

கெண்டை ஏறிய

திண்டாட்டச் சிந்து.

வெண்பா.

கொண்ட மனையாளருகில் கூத்தியாளைச் சேர்த்துவைத்து
திண்டாட்டப்பட்ட சேதிதனை—மண்டலத்தில்
சிந்தாகப்பாடி சிறுவன் விளம்புதற்கு
கந்தனுக்கு மூத்தோன் காப்பு.

கண்டிக்குப் போவோம் என்ற வர்ணமெட்டு.

(மனைவி) வந்ததிங்கே யாரடி உன்
சொந்த ஊரை கூறடி
எந்தன்நாயகன் பின்னால் நாடி பேச
ஞாயமென்ன சொல்லடி (வந்த)

([illegible]) வாடி போடியென் றென்னை வீண்
வம்பு செய்யாதே சொன்னேன் நான்
கூடி உன் நாதன் பின்னே
வந்தால் கோபம் உனக்கு யேனே (வாடி)

27 MAY 1930

(மனைவி) எனக்கேயென் மன்னன் சொந்தம்
உனக்கென்ன உண்டு சம்மந்தம் இந்த
மண்ணில் உள்ளோர் அறிந்தும்
என்னை மாலையிட்டாரே வந்தும் (என)

(தாசி) கொட்டு முழக்கோடு தாலி முன்னம்
கட்டிக்கொண்டு வந்த நீலி அவர்
கட்டை ரிஜிஸ்ட ரோடி அந்த
பட்டயமிருந்தால் தாடி (கொ)

(மனைவி) பட்டயம் உண்டா வென்று பட்டி
முண்டே கேட்டாயே இன்று அவர்
பட்ட கடனுக் கன்று உன்நகையை
கழட்டித் தந்தாயோ நின்று (பட்)

(தாசி) அவர் இட்ட நகை யதாலே தெம்பாய்
கழட்டித் தந்தாய் முன்னாலே முன்னம்
பட்ட கடன் யாராலே அதை
விட்டுச்சொல் சபைமேலே (அவர்)

(மனைவி) உன்னைபோலொத்த பொல்லா
கொடும் வேசியர்க்கழித்த தல்லால்
பின்னும் இவ்வுலகோர் நல்லாய்
இதை பேசி வெளியில் சொல்வார் (உன்)

(தாசி) தாசியால் மோசம் யேது
நீ பேசுவதெல்லாம் சூது வீணில்உன்
கைவரிசை செல்லாது யெந்தன்
கோபம்வந்தால் பொல்லாது (தாசி)

(மனைவி) உன் கோபம் வந்தால் என்னடி அதன்
கொம்பெத்தனை சொல்லடி
உன் ஜம்பம் சாயாது போடி முழ
கம்பால் அடிப்பேனடி (உன்)

(தாசி) முழக்கம்பாலடிப்பேன் யென்றாய் மெள்ள
தெம்பாய் பேசியே நின்றாய் பழ
மூங்கில் முரத்தைக் கண்டாய் உந்தன்
முகத்தில் அடிப்பேன் நன்றாய் (முழ)

(மனைவி) அடி முரத்தாலடிக்கும் முன்னே உன்
கரத்தை முறிப்பேன் நானே வெகு
சுரத்தாய் பேசுறாய் யென்னே பழ
விளக்கமார் முறியும் வீணே (அடி)

(தாசி) முறியும் விளக்க மாறு யென்று
சரியாய் சொன்னாயே பாரு இந்த
செருப்பால் கொடுப்பேன் ஆறு
அடிவாங்கிக்கொண்டப்பால் பேறு (முறி)

(மனைவி) என்ன செருப்பால் அடிப்பதாக கன
விரப்பாய்சொன்னாய் முன்பாக சாணம்
கரைத்தேன் உந்தனுக்காக சிரசில்
ஊற்றுவேனே ஒழுக (என்)

(தாசி) என் தலையில் சாணத்தை ஊத்த உனக்
கென்ன தைரியம் மெத்த வீணில்
மானாபிமானம் தோற்ற உன்னை
வெளுப்பேன் சவுக்கால் கத்த (என்)

(மனைவி) சவுக்காலடிப்பேன் என்ற பற
கருப்பனையே புணர்ந்த உந்தன்
விரப்பை அடக்க இந்த கை
கத்தியால் குத்துவேன் அழுந்த (சவு)

(தாசி) என்னைக் கத்தியால் குத்திடும்முன்னே இப்போ
எத்துவேன் காலாலே உன்னே சம்மா
சுத்துராய் எந்தனின் பின்னே உன்னை
மொத்துவேன் முகத்தில் நானே (என்)

(மனைவி) காலால் உதைப்பேன் என்ற
நாலாம் ஜாதியினில் பிறந்த
சால உங்களின் சொந்த
ஜாதித்தொழிலோ விந்தை (காலா)

(தாசி) என் ஜாதியை இழுத்துச் சொன்ன
ஈனஜாதிநாயே நீ என்ன
உங்கள் ஆதித்தொழிலும் என்ன
அதை ஓதினால் தெரியும் முன்ன (என்)

(மனைவி) அடிதாசியே உன் செய்கை கெட்டி
உன்னை நேசித்தால் தங்கக்கட்டி
என்று காசை பரித்து எட்டி
உதைத்துத்தள்ளுவாய் வெளியில் நெட்டி (அடி)

(தாசி) சுத்த சம்சாரிபோலே சும்மா
மெத்த அழுசாக பேசலாமா
உங்கள் விதத்தை அரிந் தின்னமா
இன்னும் வெளியிலே சொல்லப்போமா, (சுத்)

கும்மி.

(பொது.)

(1) இவ்விதமாகவே இருபேரும் சண்டை
இட்டுக்கொண்டங்கே இருக்கையிலே
மவ்விதமாகவே மன்னவனுமங்கே
மத்திசம் செய்யவே ஓடிவந்தான்,

(2) மூத்தமனையாளை தான்பார்த்து வெகு
முடுக்குடனே கடுகடுத்து
நேர்த்தி நேர்த்தி என்று தானுரைத்து
வெகு நிஷ்டூரமாகவே பேசலுற்றான்,

(3) சொந்தமனையாள் திரும்பிப்பார்த்து
வெகு சோபமுடனே ஆர்பரித்து
பார்த்தயா என்னை இக் கோலங்கொள்ள
படுபாவியே உனக்கு சம்மதமோ.

(4) சக்கரைக்கட்டிபோல் நானிருக்க
அந்த சக்களத்தி ஆசை ஏனுனக்கு
வெட்கமில்லாமலே அவளையழைத்து
வீட்டுக்கு வந்தாயே கொலைகாரா.

(5) நான் வீட்டுக்கு அழைத்து வந்தேனென்று
நீ வேறொன்றுமெண்ணாதே மாமயிலே
பட்டுக்கொண்டேனினி என்னசெய்குவேன்
பாவையே நீ கோபம் கொள்ளாதே.

(6) எனக்கு வழியை தேடிவிட்டு
நீ எங்கேயாகிலும் போவாயே கெட்டு
உனக்கு சனியன்பிடித்து ஆட்டுகிறான்
பொல்லா சண்டாளா துரோகி சதிகாரா.

(7) கண்டபடி என்னையேசிடாதே பெண்ணே
உன் காலிலாகிலும் விழுகிறேன் யான்
வேண்டினேன் யாரிடமும் சொல்லாதே
இதை விட்டுவிடுவாயே இத்தோடே.

(8) இவ்விதமாகவே பேசி நிற்க
பொல்லா இளையாளோடிவந்தாளே சுருக்க
எனக்கென்னவழி என்றுசொல்லி அவள்
இழுத்து வந்தாளே தெரு சிறிக்க.

(9) இப்படிக்கொத்த உன் தப்பிதனத்தை
அப்போதே கண்டால் வரமாட்டேன்
மெப்பாக பேசி நீ ஒப்பாக எந்தனை
இப்போது கைவிட காரணமேன்.

உ

வேலும்மயிலும் துணை.

முக்கிய அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர்கள், சீர்காழி கடைவீ
கா-ா-ா-ஸ்ரீ R. மீனாக்ஷிசுந்திரமுதலியார் அவர்கள் 'வெ
லைப்பாக்குக்கடையில் பெற்றுக்கொள்ளலாம். இன்னுட
குடியார்க்குபதேசமென்னும் அற்புத மதுவிலக்குச்சிந்து
முதல்பாகம், இரண்டாம்பாகமும், மாமிக்கும் மருமகளுக்
கும் மயிர்பிடிசண்டை என்கிற மாச்சரியசிந்தும் பெற்றுக்
கொள்ளலாம். ஸ்ரீகாழி க்ஷேத்திர T. L. இராமசாமி
பிள்ளை அவர்கள் இயற்றிய நூதனமான பல சில்லரை புஸ்
தகங்கள் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

இங்ஙனம்

தி. லீ. இராமசாமிபிள்ளை,

புக் பப்ளிஷர்,

புழுகாப்பேட்டை புதுத்தெரு

ஸ்ரீக

(10) விந்தையாகவே இளையாள் கேட்க
அவன் வேரொன்றும் தோணாமலே யிருக்க
சொந்தமுடனே இருபேரும் கூடியே
ஆளுக்கொருபுரமாயிழுக்க.

(11) ஐயோ தெய்வமே என்றலறி அவன்
அப்பாடா போதும் பெண்டாட்டியாசை
இப்போதே சந்நியாசி ஆவேனென்று
இருபேர் காலில் விழுந்தேகிவிட்டான்.

(12) ஏதோ தெரியா சிறுவன் யானும்
இயன்றமட்டும் இதை இயம்பி வந்தேன்
ஏதேனும் குற்றம் இருந்தால் பெரியோர்கள்
இரக்ஷித்தடியேனை காருமையா.

(13) காழிபதியில்வாழ் ராமன்வாழி
இதைக்கண்டுபடித்தவர் தான்வாழி
நேர்மையாகவே இதை அச்சியிலெடுத்தோர்கள்
நீடூழியாகவே வாழ்ந்திடுவார்.

முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!